(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 PTM 311**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**மூன்றாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## தொல்காப்பியம் - பொருளதிகாரம் - 1

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுது எது?
   அ) கார்காலம் ஆ) கூதிர் காலம் இ) இளவேனிற் காலம் ஈ) பின்பனிக் காலம்
2. முல்லைக்குப் புறனான புறத்திணை யாது?
   அ) வஞ்சி ஆ) வெட்சி இ) உழிஞை ஈ) தும்பை
3. மறையோர் தேஎத்து மன்றல் எத்தனை?
   அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது
4. மொழி எதிர் மொழிதல் யாருக்கு உரித்து?
   அ) தலைவன் ஆ) தலைவி இ) பாங்கி ஈ) பாங்கன்
5. எளித்தல், ஏத்தல் உள்ளிட்ட ஏழு வழி வகைகள் எந்தத் துறைக்கு உரியன?
   அ) அறத்தொடு நிற்றல் ஆ) வரைவு கடாதல் இ) பாங்கற் கூட்டம் ஈ) இயற்கைப் புணர்ச்சி

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. தொல்காப்பியர் காட்டும் பிரிவின் வகைகள் யாவை?
7. துயிலெடை நிலை என்றால் என்ன?
8. அறிவு உடம்படுத்தற்குக் கூட்டி உரைக்கும் குறிப்புரை எது?
9. “கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே” - எப்போது?
10. “உயிரும் நாணும் மடனும் என்று இவை செயற்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய” - இந்நூற்பா சுட்டும் நால்வர் யார்?

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

## பகுதி – ஆ ( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) ஐந்திணைகளுக்குரிய முதற்பொருள்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடங்கள் யாவை?

12. அ) “அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம்” - விளக்கம் தருக.

(அல்லது)

ஆ) உழிஞைத் திணை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

13. அ) “மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே” - விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) மதியுடம்படுதலின் வகைகளைச் சுட்டுக.

14. அ) கற்பின்கண் வாயில்கள் ஆவார் யாவர்?

(அல்லது)

ஆ) இளையோர் கூற்று நிகழும் இடங்களைக் கற்பியல் வழி எடுத்துரைக்க.

15. அ) தோழி அறத்தொடு நிற்கும் பாங்கைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) காட்டலாகப் பொருட்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?

## பகுதி – இ (5x5=25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) அன்பின் ஐந்திணைக்குரிய கருப்பொருள்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) பிரிவின்கண் தலைமகற்குக் கூற்று நிகழும் இடம் குறித்து அகத்திணையியல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

17. அ) வெட்சித் திணையின் இலக்கணத்தையும் அதன் துறைகளையும் விளக்கி வரைக.

(அல்லது)

ஆ) வாகைத் திணையின் இலக்கணம் கூறி அதன் துறைகளை விவரிக்க.

18. அ) களவொழுக்கத்தில் நிகழும் தோழியின் கூற்றுக்களைத் தொகுத்து எழுதுக

(அல்லது).

ஆ) களவியலுள் செவிலிக்குரிய கூற்றுக்களை விவரி.

19. அ) கரணம் பற்றிய கற்பியல் கருத்துக்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) கற்பின்கண் தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களை விளக்குக.

20. அ) ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவிகளை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) இறைச்சி உள்ளுறை ஆகியன குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றை ஆய்ந்துரைக்க.